காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

23—7—72

★

உள்ளே......

அம்மையாரின் அணுகுமுறை! (தலையங்கம்)

★

பாகற்காய் கசப்பதில்லை! (சிறுகதை)

★

தொல்காப்பியத்தின் தொன்மை!

★

மெல்லிய காதல்! (தொடர் கதை)

★

விலை 25 காசு

நினைத்தாலே வெடிக்குதடா!

பாவலர். கருமலைப்பழம் நீ.

—ஃ—

நினைத்தாலே வெடிக்குதடா!—நெஞ்சம்
நினைத்தாலே வெடிக்குதடா!

தொழிலாளர் நலம்காண
தொண்டாற்றும் ஆட்சியினைப்
பழிவாங்கும் நினைப்போடு
பைந்தமிழர் மாட்சிகெட

வழியொன்றும் இல்லையென
வயிறெரிய தினம்பேசி
இழிவாளர் ஒன்றுகி
இசைக்கின்ற வசைமொழியை!...

(நினைத்)

வண்டமிழைக் கறைபடுத்தி,
வடவர்கை கால்பிடித்து
முண்டங்கள் ஆண்டிருந்த
முள்ளாட்சி தனைவெறுத்து

மண்ணகத்தார் விழித்தெழுந்தார்!
வாய்த்ததுவே தமிழாட்சி!
கண்டிருக்க முடியவில்லை!
கயவர்களால்! என்சொல்வன்!...

(நினைத்தாலே)

★

தொல்காப்பியத்தின் தொன்மை

(அரூர். வித்துவான். தே. வே. சந்தானம்)

தமிழர்களின் இரு கண்களெனப் போற்றற்குரியன திருக்குறளும், தொல்காப்பியமும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அறம் பொருள் இன்பம் அடைதற்குரிய வழிகளை அழகுற நுகல்வது திருக்குறள். பண்டைத் தமிழர்கள் தூய நல்லறத் துணையாதப் பெற்று வாழ்ந்த முறையையும் வாழ்வின் பம் துய்த்தற்குச் சிறப்புறு கருவியாய்த் துணைப்புரிந்த தமிழ்மொழியின் இயல்பையும் எடுத்துக்காட்டி இசைப்பது ஒல்காப் புகழ்பெற்ற தொல்காப்பியம். தொல்காப்பியம் இலக்கணமாக இலங்குவதோடு, மொழி நூலாகவும் இலக்கிய ஆராய்ச்சி கருவூலமாகவும் அமைந்துள்ளது.

தொல்காப்பியர் இயற்றிய நூல் தொல்காப்பியமாகும். இவர் இயற்றியது எழுத்தும் சொல்லும் பொருளும் அறிந்து காப்பியம் கற்பதற்கும் இயற்றுவதற்கும் ஆகும். காப்பிய இலக்கணம் கூறும் நூலைக் காப்பியம் என்று அழைத்தல் தமிழ் மரபுக்கு ஒத்ததுதான். எழுத்து இலக்கணம் கூறும் நூலை எழுத்து என்பதும், சொல்லிலக்கணம் கூறும் நூலைச் சொல் என்பதும் இயல்பன்றோ? அவ்வாறே காப்பிய இலக்கணம் கூறும் நூலை காப்பியம் என்றனர்.

'தொல்' என்ற அடைமொழி எற்றிற்கு காப்பியம் என்றலே பொருந்துமே என வினவலாம். அவர் கூறும் காப்பிய இலக்கணங்கள் தமிழகத்தில் அவர்க்கு முன்பே தொன்றுதொட்டு பயின்று வருவன. அவற்றைத் தொகுத்தும் விரித்தும் கூறுகின்றார். ஆதலின் தொன்மையாகவருகின்ற காப்பிய இலக்கணங்களைக் கூறும் நூல் என்று உணர்த்தவே தொல்காப்பியம் என்று பெயர் சூட்டியுள்ளார்.

தொல்காப்பியம் என்னும்சொல்லுக்கு இன்னொரு பொருளும் உண்டு. தொன்மையான இலக்கிய மரபுகளைக் காத்து நிற்பது என்பதே அது. இலக்கிய மரபுகள் என்பதும் காப்பிய இலக்கணம் என்பதும் வேறுபட்டன அன்றே. ஆதலின் நூலின் பெயர் தொல்காப்பியம் அதனை ஆக்கியோன் தொல்காப்பியன் என்று அழைக்கப்பட்டார். தொல்காப்பியன் என்ற பெயர் வழக்கில் வர இயற்பெயர் மறந்துவிட்டனர். இவ்வாறு சிறப்புப் பெயர் வந்து இயற்பெயரை மறக்கச் செய்தமைக்குச் சான்றுகள் தமிழில் உண்டு. அவை யாவையெனின் பேராசிரியர், உரையாசிரியர், சேக்கிழார் முதலியனவாகும்.

தொல்காப்பியர் அகத்தியனாரின் பன்னிரு மாணாக்கருள் முதல் மாணாக்கர் என்று பன்னிரு படலமும் புறப்பொருள் வெண்பாமாலையும், நம்பியகப் பொருள் சிறப்புப் பாயிரங்களும் இலக்கணக் கொத்தும் கூறுகின்றன. அகத்தியனார் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவரான பனம்பாரனார் இயற்றிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலோ இக்குறிப்பு ஏதும் இல்லை. ஆதலால் இதுவும் ஆய்தற்குரியது என்று தொல்காப்பியச் செல்வர் திருப்பனந்தாள் தமிழ்ப் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்கள் தாம் எழுதிய தொல்காப்பியம் எழுத்ததிகார முகவுரையில் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியத்திற்கு முந்து நூல் என்று கருதக்கூடிய 'அகத்தியமும் மாபுராணமும், பூதபுராணமும், இசை நுணக்கமும்' இவை நூலின் காலத்தைப் பற்றிய பிற செய்திகள் விளக்கமாகக் கிடைத்தில ஆதலின் அது பயன்படாது என்று டாக்டர் இலக்குவனார் கூறுகிறார்.

செந்தமிழ்மொழியில் தற்போது உள்ள இலக்கண நூல்கள் எல்லாம் தொல்காப்பியத்தின் வழிநூல் ஒன்றாகிய நன்னூல் பெரிதும் தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளது இந்நூலில் உள்ள விதிகள் நன்னூலில் பெரிதும் பின்பற்றிப் பட்டிருத்தல் மட்டுமன்றித் தொல்காப்பியத்தில் உள்ள சில நூற்பாக்களும் அப்படியே நன்னூலில் சூத்திரங்களாக மேற்கொளளப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள நூற்பாக்கள், நன்னூலில் ஒன்பது உள்ளன. தொல்காப்பியத்தில் உள்ள நூற்பாக்களின் எண்கள் எழுத்ததிகாரம் 38, 125 சொல்லதிகாரம் 107, 48, 19, 275 பொருளதிகாரம் மரபியலில் 95 செய்யுளில் 168, 169, இவை நன்னூல் பாயிரம் 6, 15, 16 ஆம் எண்கள் உள்ள நூற்பாக்களாக அமைந்துள்ளன. மேலும் தொல்காப்பியத்தில் இரண்டு அடிகளால் அமைந்த நூற்பா ஒன்றன் முதல் அடி மட்டும் நன்னூலில் ஒரு தனி நூற்பாவாக அமைக்கப்பட்டுள்ளது. (தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியலில் உள்ள 63-ஆம் நூற்பாவின் முதல் அடி நன்னூலில் 407 ஆம் எண் உள்ள நூற்பாவாக உள்ளது.)

மேலும் இவைஅல்லாமல் தொல்காப்பியத்திலிருந்து நன்னூலில் மேற்கொள்ளப்பட்டுள்ள தொடர்களும் சொற்களும் மிகப்பல ஆகும். தொல்காப்பியத்தின் வழி வந்த மற்றொரு நூலாகிய இலக்கண விளக்கம் என்ற நூலிற்கு 'குட்டித் தொல்காப்பியம்' என்ற மற்றொரு பெயர் வழங்கப்பெறுதலும் குறிப்பிடத் தக்கது.

தொல்காப்பியத்தின் அடிகளை அப்படி அப்படியே பல இலக்கியங்களில் கையாளப் பட்டுள்ளன. தொல்காப்பியம் என்னும் நூல் ஒரு உயர்ந்த நவரத்தினத்தால் செய்த நூலாகும். அதிலுள்ள மணிகளை பல்வேறு புலவர்கள் பல்வேறு காலங்களில் தங்கள் தங்கள் நூலாகிய மாலையில் கோர்த்து மகிழ்ந்தார்கள் என்பது மிகையன்று.

சான்றாக 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்.'' என்னும் திருக்குறள் குறிப்பிடற்குரியது. இது குறட்பாவில் 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' என்னும் தொல்காப்பிய நூற்பாவின் சொற்களும் கருத்துக்களும் பின்பற்றியிருத்தல் காணலாம்.

வட மொழி, பாரசீக மொழி ஆர் கிலம் முதலியவற்றில் பழைய மொழிக்கும் இடைக்கால மொழிக்

(4-ஆம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 16 (மலர் உள்பட) ஆறுமாத சந்தா ரூ. 8

மலர் 8 | 23—7—72 | இதழ் 54

அம்மையாரின் "அணுகுமுறை"

இந்தியத் துணைக்கண்டத்தின் தலைமைப் பீடத்திற்கு வந்தமர்ந்து, 'நிலைத்த' வழி மறந்து 'அணுகு முறை' பற்றிய அரிய கருத்தினை அறிவுரையாகத் தந்துள்ள இந்திரா அம்மையாருக்கு 'நன்றி கூறும் அணுகு முறையில்' தவறு ஏதும் இல்லை என்றே கருதுகின்றோம்.

சிம்லா உடன்பாடு கண்ட வெற்றிச் சிந்தனையுடன் 'வெற்றுச்' சிந்தனையும் தோன்றக்கூடும் என்று யாரும் கூறிவிட முடியாது. தமிழகத்தில் விவசாயிகளின் பெயரால் வேதனை மிக்க வெறியாட்டம் நடந்து முடிந்த பிறகு, மோனம் கலந்த ஞான நிலையில் அறிவுரை கூறுவோரின் அணுகுமுறையைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

"எங்களுடைய கவலையெல்லாம் தமிழ் நாட்டு அரசாங்கத்தின் அணுகு முறை பற்றித்தான்." என்று, தாய்மைப் பண்பு மிக்கவர்—அன்னையைப் போல் அரவணைக்கும் அன்புள்ளங் கொண்டவர் என்றெல்லாம் யாரைப் பற்றிப் பெருமையாகப் பேசி மகிழ்ந்து கொள்வோமோ, அந்த அம்மையார் திருவாய் மலர்ந்திருக்கின்றார்.

தமிழ் நாட்டு அரசின் அணுகுமுறையில்—அறிஞர் அண்ணா வழியில்—அற வழியில் 'அடக்க உணர்வோடு ஆற்றலுடன் வெற்றி நடைபோடும் நாலு கோடித் தமிழர்களின் நாயகனும் டாக்டர் கலைஞரின் அணுகு முறையில் என்ன தவறு கண்டார், அம்மையார்?

"சங்கரலிங்கனார் பிரேதத்தைக் கூறுபோட்ட போது; பிரேத ஊர்வலத்துக்கு அனுமதி மறுத்தது, காங்கிரசாட்சி!

—முப்பது மைலுக்கு அப்பால் பிரேத ஊர்வலம் நடத்த அனுமதி அளித்தது கழக ஆட்சி—கலைஞர் ஆட்சி!

"முதுகுளத்தூரில்— இந்தி எதிர்ப்புப் போரில் உயிர் இழந்தோருக்கு உதவி நிதி இல்லை, காங்கிரசாட்சியில்!

—விவசாயக் கிளர்ச்சியில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு 5 ஆயிரம் ரூபாய் கழக ஆட்சியில்—கலைஞர் ஆட்சியில்!

கடந்த கால வரலாற்றில் தம் கட்சியின் அணுகு முறையால் நேர்ந்த அவலத்தை மறந்து, கழக அரசின் அணுகுமுறையில் என்ன தவறு கண்டார் அம்மையார் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

கண்கெட்ட பிறகு 'சூரிய வணக்கம்' என்பார்கள். வன்முறைகள் நடந்து முடிந்த பிறகு அணுகு முறையில் 'தேர்ந்த' அம்மையாரின் அறிவிப்பு வருகிறது.

"மின் கட்டண உயர்வு பற்றி பிரச்சனையே இல்லை" என்ற கருத்து ஜூலை 5-ஆம் நாளுக்கு முன்பே வெளியிடப்பட்டிருந்தால், விரும்பத்தகாத நிகழ்ச்சிகளுக்கு இடம் இல்லாமல் போயிருக்கும் எனக் கடற்கரைக் கூட்டத்தில் திட்டவட்டமாகத் தன் கருத்தைத் தெரிவித்த டாக்டர் கலைஞரின் "தைரியம்" யாருக்கு வரும்?

"...நான் அந்த அம்மையாருடைய செல்வாக்கை மதித்து—பெருமையை மதித்து—இடத்தின் உயர்வைக் குறைக்காமல் சொல்கிறேன், அவர்கள் முன் கூட்டியே அறிவித்திருந்தால் இந்த நிலைமை நிச்சயம் ஏற்பட்டிருக்காது. ஆனால், அப்போது தவறிவிட்டார்கள் ......" என்று எத்துணை நனி நாகரிகத்தோடு கருத்தினை வெளிப்படுத்துகிறார் கலைஞர். அவரது அணுகு முறையிலா தவறு காண முடியும்.

மாநிலங்களைத் தட்டிக் கேட்க குறைந்த பட்சம் 'டெலிபோனில்' பேச—ஒரு "மேலிடம்" தேவை, என மேலிடம் 'காலி'யான 'குமுதங்கள்' மலரும் இந்நாளில், மேலிடங்களின் முரண்பாடுகளையும் தெரிந்துகொள்வது அவசியந்தானே!

மாநிலங்களின் மேலிடம் மத்திய அரசு. மத்திய அரசின் தலைமைப் பீடத்தில் "பங்களா தேஷ்" புகழ் இந்திரா அம்மையார். அம்மையாருக்குத் தெரியாமல் மத்திய அரசின் நடவடிக்கைகள் அமைய முடியாது.

அப்படியானால்,

ஃ 17 கோடி ரூபாய்க்கு வரி போடச் சொன்னவர்கள் யார்?

ஃ கழக அரசு ரத்து செய்த 3 கோடியே 1 லட்சம் வரியை மீண்டும் விதிக்க யோசனை கூறியது யார்?

ஃ 1 கோடியே 6 லட்சம் ரூபாய்க்கு கூடுதல் வரி விதிக்க உத்திரவிட்டது யார்?

ஃ ஏக்கருக்கு 10 ரூபாய் தனியாக வரி விதித்து 3 கோடியே 10 லட்சம் வருவாய் பெறச் சொன்னது யார்?

ஃ மேலும் 10 சத விகிதம் வரி உயர்த்தி 7-கோடியே 10 லட்சம் வசூலிக்கக் கூறியவர்கள் யார்?

ஃ விவசாயிகளிடத்தில் மட்டும் 15 கோடியே 40 லட்சம் வசூலிக்க வேண்டும் எனக் கண்டிப்புடன் எழுதியவர்கள் யார்?

—மத்திய அரசு, இவ்வாறெல்லாம் விவசாயிகள்மீது வரிகளை விதிக்கச் சொல்லிவிட்டு, "அணுகு முறை" பற்றிக் குறை கூறுவது ஏமாற்று வேலையாகும் என மதுரைக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களைத் தெளிவற்ற "குமுதங்கள்" நன்கு உணரவேண்டும்.

அரசினருக்கும் அனைத்துக் கட்சியினருக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளில் ஒருமித்த முடிவுகள் ஏற்பட்டன என்னும் செய்தி, டாக்டர் கலைஞரின் அணுகுமுறைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்பதனை 'அணுகு முறை' புகழ் அம்மையார் அவர்கள் நன்கு அறிவார்கள்.

விவசாயிகளின் கிளர்ச்சி நிறுத்திவைக்கப்பட்ட தோடு மட்டுமல்ல, ஒருமித்த இம்முடிவுகளால் முற்றுப் புள்ளியும் வைக்கப்பட்டு விட்டது.

ஃ உத்திரப் பிரதேசத்தில் 25 பேர் சுட்டுக் கொல்லப்பட்டபோது, 'அணுகு முறை' உபதேசம் புரியாமல்,

ஃ கேரளாவில் தனியார் கல்லூரி கிளர்ச்சி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் கூட அணுகு முறை பற்றிய கருத்தினை வெளியிடாமல்,

—தமிழக அரசின் அணுகுமுறை பற்றி மட்டும் கருத்தை வெளியிடுவது, அம்மையாரின்மேல் கொண்டுள்ள அழுத்தமான நம்பிக்கையைச் சிதைப்பதாக அமையலாம்.

கழக அரசின் அணுகு முறை, மத்திய அரசின் அணுகுமுறையைவிட எந்தவிதத்திலும் குறைவானது அல்ல.

டாக்டர் கலைஞரின் அணுகுமுறை, "உபதேசம்" செய்பவர்களின் அணுகுமுறையை விட எந்த வகையிலும் குறைந்ததல்ல.

—மணிவேந்தன்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் பெரிதும் வேறுபாடு இருத்தலைக் காண்கிறோம். வேத கால வடமொழியும் வெவ்வேறு தனி மொழிகளைப்போல நிற்கின்றன. அவை தனித் தனி இலக்கணம் உடையனவாகவும் காணப்படுகின்றன. பாரசீக மொழியும் ஆங்கில மொழியும் அவ்வாறே உள்ளன. ஆனல் தொல்காப்பியனர் காலத்திலேயே தமிழ்மொழி மிகப் பண்பட்டு, ஒரு வரையறையான உருவத்தினை அடைந்துவிட்டது என அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்தாம் எழுதிய 'தொல்காப்பியச் செல்வம்' என்ற நூலில் குறிப்பிடுகிறர்.

தொல்காப்பியத்தின் இலக்கண அமைப்பிலேனும், ஒலி அமைப்பிலேனும் மிகப் பெரிய மாறுதல்கள் பின்னர் நிகழவில்லை. ஆயினும் காலப் போக்கிற்கும் மொழிவளர்ச்சிக்கும் ஏற்பத் தொல்காப்பியத்தில் உள்ள சில விதிகள் வேறுபட்டும் சில விதிகள் வழக்கு இழந்தும் உள்ளன. இவ்வாறு மிகச் சில மாறுதல்களைத் தவிர, அன்று தொல்காப்பியனர் வகுத்த இலக்கண வரம்பு இன்றுவரை பெரும்பாலும் நிலைபெற்றிருப்பது வியந்து பாராட்டுதற்குரியது.

தொல்காப்பியத்திற்குப் பின் சில இலக்கண நூல்களும் தோன்றியிருந்தும் தொல்காப்பியம் இன்றும் புதுமையுடையதாக இருப்பதற்கும், இன்றுவரை எல்லோரும் அதனைச் சிறப்பாக கற்பதற்கும் காரணம் அதன் செம்மையான அமைப்பும் அதன்கண் கூறப்பட்டுள்ள இலக்கண வரம்பின் உறுதிப்பாடுமே ஆகும். மொழியில் வல்லுநர்கள் இப்போது ஆய்ந்து காணும் கருத்துக்களுக்கு உரிய அடிப்படைச் செய்திகள், தொல்காப்பியத்து எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் உள்ளன என்று அறிஞர்கள் கூறுவதும் குறிப்பிடத்தக்கதும் பாராட்டுதற்குரியதாகும்.

தொல்காப்பியத்தில்இன்றைக்கு இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்இருந்து ஒலி இயல், சொல் வழக்காறுகள், அளவை வகைகள் மக்களின் பாகுபாடுகள், தமிழகத்தின் ஆட்சி முறை அறங்கூறும் அவையத்தின் இயல்புகள் போர்முறை. நகர் அமைப்பு, சிற்பம், ஓவியம் முதலிய கலை நுணுக்கங்கள் குடிமக்களின் வாழ்க்கை தொழில்கள் காதல் மண முறைகள் பெண்ணின் பெருமை, கடற் செலவு, வாணிகச் சிறப்பு, உழுதொழில் மேம்பாடு, நிலஇயல், வானஇயல், உயிர்இயல் ஆகியவற்றின் அறிவு முதலிய பல துறைச் செய்திகள் அடங்கியிருக்கிற நூல் தொல்காப்பியமாகும்.

தொல்காப்பியத்திற்கு முன்பு பல இலக்கண நூல்கள் இருந்தது என்பது தெரிய வருகிறது. அவர் நூலின் கண் 'என்ப' 'என்மனர் புலவர்' 'மொழிப' என்று கட்டுவதால் விளங்கும் இவருக்கு முன் பல நூல்கள் இருந்தது மட்டுமல்ல; சிறந்த பகுதிகளுக்கு விரிந்த தனிச்சிறப்பு நூல்களும் வழங்கின என்பதும் சுட்டப்படுகிறது. 'யாப்பறி புலவர்' என்பர், தோலென மொழிய தொன்மொழிப் புலவர்' என்பர். 'தொடை உணர்வோரே என்ற குறிப்புக்கள் இடையிடையே சுட்டுதல் சிந்தித்தற்குரியனவாம். எனவே தொல்காப்பியத்திற்கு முன் ஆதார நூல்கள் பல என்பதும் அவற்றைப் படித்துத் திரட்டிச் சுருக்கி உருவாக்கியதே தொல்காப்பியர் நூலென்பதும், அதற்கு முதல் நூல் அழிந்த 'அகத்தியம்' ஒன்றே என்பதும் பின் புராண காலத்திற் புகுந்த கதை என்பதும் நேரிய ஆராய்ச்சியாளர் நடுநிலை முடிபாம் என பசுமலை வழக்கறிஞர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் குறிப்பிடுகிறர்.

கால ஆராய்ச்சி

மகாபாரத காலம் கி.மு. 1590 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் தொல்காப்பியர் எனவும் களவியல் உரையின்படி இடைச்சங்கம் கி.மு. 5320-இல் தொடங்கப் பெற்றமை புலனுதலின், தலைச் சங்கத்து இறுதியிலும் இடைச் சங்கத் தொடக்கத்திலும் வாழ்ந்தவராகிய தொல்காப்பியர் காலமும் அதுவே எனவும் அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் க. வெள்ளைவாரணம் அவர்கள் கூறுகிறர். எனவே தொல்காப்பிய காலம் கி. மு. 5000 என்று துணியலாம். அகச்சான்று கொண்டு ஆய்ந்து இறுதியில் தொல்காப்பியர் காலம் 3000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் கலைக் களஞ்சியத்தில் குறிப்பிடுகிறர்.

திருக்குறள் தொல்காப்பியத்திற்கு பிந்திய நூல் என்பது தெளியலாம். தொல்காப்பியர் 'கள்' என்னும் ஈற்றை உயர்திணைப் பன்மையை உணர்த்தவும் பயன்படுத்தியுள்ளார். 'துறந்தார்க்குத் துப்புரவுவேண்டி மறந்தார் கொல் மற்றை யவர்கள் தவம்' என்னும் குறட்பாவில் மற்றயவர் என்பதே பன்மைச் சொல்லாக நிற்க அமையும். ஆயினும் 'மற்றை யவர்கள்' எனக் 'கள்' ஈறும் சேர்க்கப்பட்டுள்ளது தொல்காப்பியர் திருவள்ளுவர் காலத்துக்குப்பிற்பட்டவராயிருப்பின் கள் 'ஈறு'.

(15-ஆம் பக்கம் பார்க்க)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மெல்லிய காதல்

(புலவர் .தி. நா. அறிவுஒளி)

“என்ன வயதாகிறது உங்களுக்கு?”

“இருபத்தைந்து.”

“சின்ன வயதுதான். திருமணம்...?” என அதிகமான் வினவும்போதே கண்ணப்பர் குறுக்கிட்டு, “இல்லை அதிகமான். இன்னும் ஆகவில்லை.” என்றார். புகழேந்தி தலை குனிந்தான்.

சிறிதுநேரம் பொதுச் செய்திகளைப் பற்றிப் பேசினர். இறுதியில் அதிகமானும் புகழேந்தியும் தத்தம் முகவரிகளை எழுதி யளித்தும், பெற்றும் மகிழ்ந்தனர்.

அன்பும் பண்பும் உடையவர் அதிகமான் என்பதை அச்சிறுபொழுதுப் பழக்கத்தில் புகழேந்தி உணர்ந்தான். அவருடைய பேச்சில் ஆழ்ந்த அறிவு மணமும், திட்பமும், தெளிவும் மிளிர்ந்ததை நுணித்தறிந்தான். எதையும் எண்ணி முடிவு காணும் இயல்புடையவர் அதிகமான் என்பதை அவர் பேச்சே மெய்ப்பித்தது.

புகழேந்தியின் உள்ளம் தனக்குத் தானே நாணமுற்றது. அதிகமானின் கல்வியறிவும், எண்ணுந்திறமும் தனக்கில்லையே என ஏங்கினான். பட்டம் பெற்றுவிட்ட படிப்பாளியே தவிர புகழேந்தி உண்மை அறிவாளியல்ல. தேர்வுக்காகக் குறிப்பிட்ட பாட நூல்களை—நூற் குறிப்புக்களை—ஓயாமல் ‘உரு அடித்து, ‘கிளிப் பிள்ளை’யானவனே தவிர; ஆழ்ந்த அறிவு நுட்பம் அடைந்தவனல்ல. ‘இனி அதிகமானைப்போல அறிவைத் தேடி அடைய வேண்டும் என உறுதிகொண்டான்.

‘அதிகமான் கடலூரைச் சேர்ந்தவர். வேலையின் காரணமாகச் சென்னையில் குடும்பத்தோடு வாழ்கிறார்’ என்ற செய்தியைக் கேட்டறிந்தான். பின் அவரிடம் விடைபெற்றுத் தன் விடுதி செல்ல மாடி விட்டுக் கீழிறங்கினான். நிலா முற்றத்தில் சில பெண்கள் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களிடையே செல்வியும் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். களைத்துறங்கும் அவள் கவின் முகத்தில் பெண்மை ஒளி வீசியது, களங்கமற்ற குழந்தை உள்ளம் உடையவர்களுக்கே அத்தகு எழில் ஒளி வீசும். செல்வி படுத்திருந்த நிலையிலுங்கூட உடல் முழுதையும் ஆடையால் மூடியவாறு அடக்கமாகவும் அமைதிப் பண்போடும் உறங்கிய காட்சி அவன் அறிவில் ஆழப் பதிந்தது, ‘அடடா! ஒரு முழுக் குடும்பமே பண்பின் நிலைக்களமாக இருக்கிறதே!’ என வியந்தான். செல்வியின் அழகைச் சுவைத்தபடி சில நொடிகள் நின்றுவிட்ட புகழேந்தி தன் நினைவு மீளப் பெற்று விடுதிக்குச் சென்றான்.

இரவில் தூக்கத்திலிருந்து திடீர் திடீரென விழித்தெழுந்த புகழேந்தி செல்வியை நினைத்து நினைத்து இன்பமும் துன்பமும் ஒருங்கே அடைந்தான்.

விடிந்த பின் அதிகமானிடமும் மண வீட்டினரிடமும் வேலனிடமும் விடைபெற்றுக் கொண்டு ஊருக்குக் கிளம்பினான் புகழேந்தி. இறுதியாக ஒரு முறை செல்வியைக் காண விரும்பியவன் விருந்தினர் விடுதி மாடிக்குச் சென்றான். ‘ஏதோ ஒரு புத்தகத்தை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தாள் செல்வி. அவள் தூணில் சாய்ந்தபடி அமர்ந்திருந்த அழகோவியக் காட்சி ஓவியக் கலைஞர்களுக்கு நல்ல கற்பனை விருந்தாக நிலைபெறத் தக்கது’ என எண்ணினான். அவளருகில் அமர்ந்திருந்த அறிவுடைநம்பி பூவரசன் இலையினால் செய்த ஊதுகுழலால் “பீப்பீ ஈ...இ...” என இசைத்துக் கொண்டிருந்தான்.

புகழேந்தி சிறுவனை அழைத்தான். குரல் கேட்டு நிமிர்ந்தனர் செல்வியும் அறிவுடை நம்பியும். முத்து தெறித்தாற்போல் அவள் கண்ணின் கதிரொளி மின்னித் தெறித்தது. உடனே எழுந்து நின்றாள் நாணத்தோடு. நம்பி “மாமா!” எனக் கூவியபடி ஓடிவந்து அவனைக் கட்டிக்கொண்டான். புகழேந்தி நம்பியின் கன்னத்தைத் தட்டித் தன் பையிலிருந்து ‘இனிப்புகள் நிறைந்த பெட்டி’ ஒன்றைப் பரிசாகக் கொடுத்தான்.

“நம்பி, ஊருக்குப் போய் வரட்டுமா?’ எனக் கேட்டு விடைபெற்றான். செல்வி, “நம்பி, ‘வணக்கம்’ சொல்லு.” என அறிவுறுத்தினாள்.

நம்பி அழகாக வணங்கினான் மகிழ்ச்சியுற்ற புகழேந்தி செல்வியைப் ‘பட்டும் படாமலும்’ பார்த்து விட்டு வெளியேறினான். தெருவில் இறங்கிச்செல்லும் போது மாடியிலிருந்து செல்வி தன்னை ஆவலோடு பார்க்கிறாளா? என்றறிய மேலே நோக்கினான். அங்கே மாடிக் கைப்பிடிச் சுவர் மட்டுமே காட்சி யளித்தது!

ஏமாற்றச் சுமையை உள்ளத்தில் ஏந்தியவனாகப் புகழேந்தி புகை வண்டி நிலையத்திற்குச் சென்றான்.

அவனுள்ளத்தில் ஆவலும் ஏக்கமும் ஒன்றோடொன்று மோதிப் போராடின. ‘அவள் யாரோ? அவன் யாரோ? அவளையே ஏன் நினைக்க வேண்டும்? அவளுக்கும் அவனுக்கும் யாதொரு உறவும் இல்லை. இந்நிலையில் அவளிடம் கவர்ச்சியுறுவது அறிவுடைமையல்ல.” என எண்ணினான்.

ஆனாலும் ஏதோ ஒருவகை ஏக்கம் அவனகத்தில் சூழ்ந்தது. தன்னுணர்ச்சிகள் சிதைந்து உருக்குலைவதை எண்ண அவனுக்கே வியப்பாக இருந்தது.

காஞ்சிக்கு விடைகூறிப் பிரிவதுபோலப் புகை வண்டி கூவெனக் கூவிவிட்டுப் புறப்பட்டது வண்டியில் ஏறியமர்ந்த புகழேந்தி பலகணி வழியாக வானத்தைப் பார்த்தான்.

வானில் திட்டுத் திட்டாக முகிற் கூட்டங்கள் திரண்டிருந்தன. நாரைக் கூட்டம் ஒன்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிப் பறந்துகொண்டிருந்தது.

(2)

பரபரப்பான நகரமான திண்டிவனம் தன் கடமையில் ஆழ்ந்திருந்தது.

புகழேந்தி தன் செயலகத்தில் கண்ணும் கருத்தும் கடமையிலிருக்க ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். மாலை மணி ஐந்தடித்தது. செயலகத்திலிருந்தவர்கள் யாவரும் விரைந்து வீட்டுக்குச் சென்றுவிட்டனர். இறுதியாக அவனறையினுள் சுருக்கெழுத்தாளி மீனு நுழைந்தாள். ஒரு திரைப் பட நடிகையைப் போலப் 'பால் கவர்ச்சி' உண்டாக்கும் முறையில் உடலோடு இறுகிய மிக மிக மெல்லிய கண் கவரும் வண்ண உடையோடு பொலிந்தாள். பொன்னிற மேனியில் இளமையின் செழுமை திருக்கூத்திட்டது. முகத்தில் அங்கும் இங்குமாக பருக்கள் தெரிந்தன.

"போய் வரட்டுங்களா?" எனச் சிரித்தபடி கேட்டாள் மீனு.

தலைநிமிர்ந்த புகழேந்தி, "ஓ! போய் வாருங்கள்" என விடையளித்தான். மீண்டும் ஒரு மின்னும் புன்னகையைச் சிந்திவிட்டு வணங்கி வெளிவந்தாள். அவளுதடு ஏதோ முணு முணுத்தது. மீனு வெளிச் செல்வதைப் பார்த்துக்கொண்டே முகிலன் உள்ளே நுழைந்தான்.

"புகழேந்தி, போகலாமே...?..." என அழைத்தான்.

புகழேந்தி விரைந்து எழுதி முடித்துவிட்டு, முகிலனோடு புறப்பட்டான். இருவரும் இணையாகப் பேசியவாறு நடக்கலாயினர்.

"புகழேந்தி, நம் செயலகத்தில் 'கொக்கு' இருக்கிறானே; ஒரு நாளைக்கு அவனை என் எதிரில் நிற்க வைத்து நன்றாகக் கேள்வி கேட்டுக் கொல்லப் போகிறேன். கயவன்!"

"ஏன் முகிலன்? 'கொக்கு' என்ன செய்தான்?"

"இன்றைக்கு வீணை என்னிடம் வந்து மீனுவைப் பற்றிக் கதை அளந்துவிட்டு, அவளிடமும் போய், 'உன்னை முகிலன் வரச் சொன்னார்' என்றும் சொல்லிவிட்டான். என்னறைக்கு வந்த மீனு, 'ஏன் கூப்பிட்டீர்கள்?' என்று இளித்துக்கொண்டே கேட்டாள். என்னோடு இரண்டு பேர் வெளியார் இருந்தார்கள், உடனே நிலைமையைப் புரிந்துகொண்டு, "தலைவர் ஏதேனும் முறையீடுகள் கொடுத்தாரா உங்களிடம்?" என்று கேட்டு மழுப்பினேன். அவளும் பதிலளித்துவிட்டு உடனே திரும்பிப் போய்விட்டாள் ...கொக்குவின் கொழுப்பைப் பார்த்தாயா?"

"முகிலன் நீ கொக்குவினிடம் அளவுக்கு மேல் பழகுகிறாய்."

"யார்? நானா?...அவனே மேலே வந்து 'விழுந்து' பழகுகிறான். தானே வருபவனை 'வேண்டாம்' என்று எப்படிச் சொல்ல முடியும்? அதுவுமின்றி அவனோடு நெருங்கிப் பழக நானும் விரும்புகிறேன். ஏனென்றால் அவன் நெருப்பு!" என்று கூறிய முகிலன் எள்ளலாகச் சிரித்தான்.

"முகிலன், அவன் நெருப்பென்று தெரிந்தும் நெருங்கிப் பழகலாமா?" "காரணம் இருக்கிறது. தமிழில் அரிய வாழ்வுண்மைகள் கொண்ட ஒப்பற்ற பழமொழிகள் சிலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார்களே, ஏன்? நம் போன்றவர்கள் அக்கருத்துக்களை வாழ்க்கையில் கடைபிடிக்கத்தானே!......'அண்டிக் கெடுத்தல்', 'உறவாடிப் பகை கெடுத்தல்' 'முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்' என்பதெல்லாம் படித்துணர்ந்ததால்தான் வாழ்வில் விழிப்பாக வழுக்கி விழாதபடி வாழ முயல்கிறேன். அதனால்தான் 'கொக்கு'வுடன் இழைகிறேன். ஆனால் ஒன்று. நான் அவனோடு பழகவில்லை; கண்காணிக்கிறேன். அவ்வாறு இருந்தால்தான் நெருப்பு நம்மையும், நம் சூழலையும் சுட்டுத் தீய்க்காமல் இருக்கும். எப்படிப்பட்ட அதிகாரியையும் 'காக்கைப் பிடிப்பதே' தொழிலாகக் கொண்டிருக்கிறானே கொக்கு! அவனைக் கண்காணிக்க வேண்டாமா?"

"முகிலன், கொக்கைப் பழிக்காதே. நம் நாட்டிலுள்ள பொதுத் தவறு 'காக்கைப் பிடித்தல்.' பணிமனைத் தலைவர்கள் பலரும் 'காக்கைப் பிடிப்பதை' விரும்புகிறார்கள்; வரவேற்கிறார்கள். ஆகவேதான் காக்கைப் பிடிக்கும் கூட்டமும் இருக்கிறது. காக்கைப் பிடித்தால்தான் காரியம் நிறைவேறுகிறது. பிறர் நம்மை மதிக்கிறார்கள் தன்னலம் நிறைவேறுதற்குரிய ஒரே வழி 'காக்கைப் பிடிப்பது' என்றால், அச்செயலைப் போற்றி ஒழுகுபவர்கள் தொகை வளர்வது வியப்பா? என்ன?"

"புகழேந்தி, என்ன இருந்தாலும் அது தவறுதான். அதிலும் 'கொக்குவினிடம் கெட்ட நடத்தைகள் பல உள்ளன. கோள் மூட்டுவதும், சிண்டு முடித்துப் பகை வளர்ப்பதும், சூழ்ச்சிகள் செய்வதும், ஆளைக் கவிழ்ப்பதும்...ஆகிய இத்தகைய இழிந்த செயல்களைப் படித்தவர்களா செய்வது? கயமை! கயமை!"

"முகிலன், ஒவ்வொருவரும் வாழத் துடிக்கிறார்கள்; முன்னேறத் துடிக்கிறார்கள். அதற்குரிய வாய்ப்பும் வழியும் நேரிய முறையில் அமையவில்லையென்றால்; நேர்மை தவறிய வழியில் முன்னேற முனைகின்றனர். அந்த வழியில் நல்ல வெற்றி கிடைத்துவிடுகிறதென்றால் எல்லாரும் தவறான வழியிலே செல்ல முற்படுகின்றனர். இந்நிலையில் அவர்கள் வளர்ச்சிக்கு யாரேனும் தடையாக இருந்தாலோ; அவர்கள் செயலைத் திறனாய்ந்து குறுக்கிட்டாலோ; அத்தகையவர்களைப் பகைக்கின்றனர். அழிக்க முனைகின்றனர். இதனால்தான் சூழ்ச்சி, கோள் மூட்டுதல், சிண்டு முடித்தல் ஆகிய செயல்கள் மலிகின்றன."

"ஊம்...பொறாமைதானப்பா இதற்கெல்லாம் அடிப்படை. மற்றவன் நல்லபடி வாழ்கிறானே; மற்றவன் நம்மைவிட முன்னேறி விடுகிறானே என்ற வயிற்றெரிச்சலால்தான் இத்தகைய அகக் குறும்புகள் செய்கின்றனர்."

"நீ சொல்வதும் உண்மைதான்."

"இந்தக் கொக்கு வேலைக்கு வந்தது எப்படித் தெரியுமா?"

"தெரியாது முகிலன், பிறருடைய தனி வாழ்வைத் திறனாய்வதோ, மறைந்து கவனிப்பதோ விரும்பத்தகாத செயல். ஆகவே நாம் வேறு பேசலாம்."

"ஆனால்...புகழேந்தி, கொக்கின் ஊழல் நம்மைச் சேர்ந்த செய்தி..." "தொலையட்டும். அதைத் தெரிந்து, ஆவப் போவது என்ன? ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லையா?...உம்......நல்லது. என் வீட்டிற்கு வந்து, சிற்றுண்டி அருந்திவிட்டுப் போ. உம்......வா."

"எதற்காக முகிலன்?..."

"ஏழைகள் வீட்டில் என்றோ ஒரு நாள்தான் சிற்றுண்டி செய்வார்கள். அன்றைக்கு மட்டுந்தான் விருந்தாளியைக் கூப்பிட முடியும்.

"அப்பப்பா. நிறுத்து. நான் சாப்பிட வருகிறேன்."

இருவரும் முகிலனின் ஒட்டுக்குடி வீட்டினுள் சென்றனர்.

நடுநிலைக் குடும்பத்தைச் சேர்ந்த முகிலனுக்கு வயதான பெற்றோரும் ஒரே தங்கை வெள்ளி வீதியும் இருந்தனர். புகழேந்தியின் வீட்டுக்குச் சிறிது தொலைவில்தான் முகிலனின் வீடும் இருந்தது.

முகிலன் குடியிருந்த வீடு மிகப் பெரியது. அதில் ஏழெட்டுக் குடும்பங்கள் 'பெரு வாழ்வு' வாழ்ந்தன. முகிலன் அப்பேரின்ப வீட்டின் கடைசிப் பகுதியான புறக்கடைப் பகுதியில் குடியிருந்தான். அவ்வீட்டின் தலைவாயிலின் வழியாகப் புகுந்து இறுதிப் பகுதி வரை போய்ப் பார்ப்பவர்கள் தமிழ் நாட்டு நடுநிலைக் குடும்பங்களின் 'வாழ்நாள் தண்டனை' வரலாற்றைத் தெளிவாக அறிய முடியும். அங்கே வாழ்பவர்கள் பதினாறும் பெற்று—[பதினாறு வகை நோய்— அல்லது —துன்பங்கள்!] வாழும் அழகைக் காணலாம்!

கை—கால்—உடல்—எங்கும் சொரி சிரங்கால் துன்புறும் குழந்தைகளும், வற்றி உலர்ந்து 'காய்ந்த சரகு' போன்ற பெண்களும், 'நோய்க் கிடங்கு' எனக் கூறத்தக்க 'மனித விலங்கு'களும், அங்கே 'கண் காட்சி'யாக இருந்தனர். ஈ, கொசு, மூட்டைப்பூச்சி, நோய் தரும் நுண்ணுயிர்கள் ஆகியவைகள் தோன்றும் பிறப்பிடமே அவ்வீடுதான்!

(வளரும்)

வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவோ நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் : சென்னை-8

தீயோர் இன்பம்

— பாவலர். எழிற்கோவன் —

★

அரவத்தை எதிர்ப்பட்ட அரும்படையும்
நடுக்கமுறும்; அரித்துத் தீய்க்கும்
திரவத்தை யாள்கின்ற திறநெஞ்சும்
பயமறியும்; திருடி மேவும்
உருவோர்முன் செல்வந்தர் ஊனுடலின்
நடுக்கமெழும்; உயிரை மாய்க்க
வருவோரை யடிபணிந்து வையமெலாம்
வாழ்ந்திருக்கும்; வரைவாய் நெஞ்சே!

பழிக்கஞ்சா தீயோர்முன் பண்பாளர்
பணிவார்கள்; பாவித் தன்மை
கொழித்தறிந்த நிலையினரே கொற்றவராய்
வாழ்வார்கள்; கொடுமைப் போக்கின்
வழியறிந்து வாழ்வோரே வாழ்வியலைச்
சுவைப்பார்கள்; வறுமை யோரைக்
குழிதோண்டிப் புதைப்போரே குறையின்றி
வாழ்வார்கள்; கூறுய் நெஞ்சே!

குத்தவருங் கத்திமுனை குலைநடுக்கக்
கூற்றெழுப்பும்; குடித்து ஆடும்
எத்தரின்முன் உத்தமரின் எதிர்ப்பனைத்தும்
எரிந்தழியும்; ஏய்த்து வாழும்
பொத்தலுளக் கூத்தினரே புத்தரெனத்
திரிந்திடுவர்; பொசுக்கும் பாங்கில்
தொத்தியெழும் நோய்நொடிக்குத் தோத்தரத்துப்
பாடலெழும்; துணைநீ நெஞ்சே!

தாய்மொழியைத் தவிக்கவிட்டு பிறமொழியைத்
தாவுகின்ற தடியர் தாமும்
சேய்களெனத் தமிழகத்தில் களிப்புடனே
செயலாற்றும் சிறுமைக் கோலம்!
வாய்மையினை மறந்தோரும் வள்ளுவனுர்
வழிநடப்ப தாகச் செப்பி
ஏய்க்கின்ற கொடுமையினை எந்தமிழான்
சகிக்கின்றுன்; எரிவாய் நெஞ்சே!

நாவலரே! தமிழ்க்காவலரே!!

— கலவை பா. வரதன் —

★

வண்ணமணிக் கோவை! வடித்தெடுத்த கொம்புத்தேன்!
புன்னைமர நீழல்! புலிப்பாய்ச்சல் — கன்னல்
பிழிந்த சுவைச்சாறு உம்பேச்சாகும் — பாலில்
விழுந்த பழமொக்கு மே!

இன்னுமின்னும் கேட்போமா என்று மனம்மயங்கச்
சொன்னமொழி யாலெங்கள் சோர்வகற்றி—அண்ணனுடன்
தொண்டு புரியத் துணை நின்றீர்! பல்லாண்டு
கண்டுநீர் வாழ்க களித்து!

பாடம்பயிலும் மொழிபைந்தமிழே என்றுரைத்துத்
தேடும் புகழைத் திரட்டிவிட்டீர்! சாடுபவர்
சாடட்டும் என்று தலைநிமிர்ந்தீர்! சீர்பலவும்
தேடட்டும் உங்கள் திறம்!

கல்வி அமைச்சர் கடமையினைக் கண்ணுகக்
கொள்வதிலே அண்ணன் கொடுத்தவழி — செல்வதற்கு
முத்தமிழ் ஆய்ந்த முதல்வர் கலைஞரது
ஒத்துழைப் பெந்நாளும் உண்டு!

ஓய்வற்ற தொண்டு! ஒழிவற்ற நல்லாக்கம்!
நோயற்ற வாழ்க்கையது நூருக — வாய்த்திடுக!
என்றெனது நெஞ்சம் இனிதுரைக்கும் இன்றேபோல்
நின்று சிறப்புறுக நீர்!

பாகற்காய் கசப்பதில்லை

"என்ன சேகர், சென்னைக்குப் போறியாமே!"

அண்ணன் சந்திரனின் குரல் நாவலில் முழுகியிருந்த என்னை உசுப்பியது.

தலை நிமிர்ந்தேன்.

எதிரே—

அண்ணன் மட்டும் நிற்கவில்லை; தங்கை நளினியும் அண்ணனுக்குப் பக்கத்தில் நின்றவாறே என்னை நோக்கிக் கொண்டிருந்தாள்.

"என்னண்ணா?"

கேள்வி தெரிந்தும் இடைவெளியை இன்னும் நீட்ட விரும்பிப் பொருளில்லாமல் ஒருசொல்லை உதிர்த்தேன்.

"சென்னைக்குப் போறதா சொன்னியே! எப்போ போறேன்னு கேட்டேன்..."

நாளைக்கு ஜனதாவில் போகலாம்னு இருக்கேன்..."

"கதைப் புத்தகம் ஒண்ணு கையில் இருந்தாலும், உன்னுடைய நினைவெல்லாம் எங்கோ இருக்காப்போல் இருக்கே! ரொம்பவும் இனிமையான நினைவு தானோ?"

எதெற்காக இந்தப் பூடகமான பேச்சு?

நடக்கக் கூடாத ஏதோ ஒன்று நடக்கப் போகிறது!

"அப்படீல்லாம் ஒண்ணுமில்லையே! இதென்ன பார்க்காத சென்னை நகரமா? நண்பர்கள் சிலரோடு ஒருவார விடுமுறைப் பொழுதைக் கொஞ்சம் இனிமையாக் கழிக்கலாமென்னுதான்..."

எனக்கு விளக்கம் சொல்லத் தெரியவில்லை.

இதுநாள் வரை என்னை இவ்வளவு நெருங்கிப்பேசாத அண்ணா இன்றுமட்டும் ஏனிப்படி வளைத்து வளைத்துப் பேசிக் கொண்டிருக்கிறான்?

சந்திரன் என் சொந்த அண்ணா இல்லை; என் பெரியம்மா பிள்ளை. ஏதோ திருமணம் ஒன்றுக்காக வந்தவன் இரண்டு நாட்களாக வீட்டில் தங்கியவன் இதுபோலப் பூடகமாகப் பேசுவதென்றால்...

என் சிந்தனையை நீடிக்க விடாமல் ஒரு விசும்பல் ஒலி எழுந்தது.

தங்கை நளினி அழுகிறாள்!

ஏன்?

"நளினி, நீ ஏம்மா அழறே? இப்போ என்ன ஆயிடுத்து?"

— "இளவரசி" —

அண்ணா சந்திரன் அவளை ஆசுவாசப் படுத்தினான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை; கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது.

அண்ணா சந்திரன் எனக்கெதிரே நாற்காலியில் அமர்ந்தான். எதையோ பேசத்துவங்கத் தயங்குபவன் போலிருக்கவே என் மனத்தைக் கலவரம் கவ்வியது. தொண்டையை ஒருதடவை கனைத்துவிட்டுக் கொண்டான் அண்ணா

"ஏண்டா சேகர், நீ செய்யறதெல்லாம் உனக்கே ஒழுங்காய் படறதோ?"

"ஒழுங்குக் குறைவு மட்டுமா அண்ணா? அப்பாவுக்குச் செய்யற பெரிய துரோகமாச்சேண்ணா." தங்கை நளினி அண்ணாவின் பேச்சைத் தொடர்ந்து சொன்னாள்.

துரோகமா? நான் அப்படி என்ன செய்துவிட்டேன்?

"உங்கள் கல்லூரியில் இரண்டாம்ஆண்டு பி.ஏ. படிக்கிறாளாமே ஒருத்தி, மாலதின்னு. அவளை உனக்குத் தெரியுமா?"

மாலதி! என் மாலதியைப் பற்றி அண்ணா என்ன சொல்லப் போகிறான்?

"ஏன், அவளுக்கென்ன? அவளும் ஒரு செகரட்டரி..."

"ஓகோ!"

"ஏண்டா இது? இங்கே என்னமோ சபை கூடியிருக்கு... நளினி அழறமாதிரி இருக்கு... எனக்கு ஒண்ணுமே புரியலையே!" என்றவாரே அம்மாவும் வந்து சேர்ந்தாள்.

அண்ணா சொல்லப்போகும் விஷயம் தெரியாததுபோல நான் விழித்தாலும், உள்ளத்தின் ஒரு பகுதி விஷயத்தை விண்டு கண்டுவிட்ட தெளிவுடனும், 'தெரிந்து விட்டதே!' என்ற திகைப்புடனும் துடிதுடித்தது. கையிலிருந்த புத்தகம் கீழே விழுந்தது, என் கைகள் கண்ட நடுக்கத்தில்.

அண்ணா தொடர்தான்.:

"நளினியை ஓரிடத்தில் கட்டிக் கொடுக்கணும்; தம்பி சுதாகர் இந்த ஆண்டு எஸ். எஸ். எல். சி— அடுத்த ஆண்டு அவனைக் கல்லூரியில் சேர்க்கணும்; அப்பாவோ மனம் புண்பட்ட நிலையில் கடன்காரர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிச்சுக்கிட்டிருக்கார்

சிறுகதை!

குடும்பமே உன்னை நம்பிக்கிட்டிருக்கு ...நீ என்னடான்னு காதல் கிதல்னு ..."

கைகளின் நடுக்கம் என் உடல் முழுதும் பரவியது. இருந்தாலும், சமாளித்துக்கொண்டு பதிலளித்தேன்.

"என்னண்ணு, அப்படி சொல்றீங்க! நான் அப்படியெல்லாம் துரோகம் செய்வேனு? நீங்க சொன்ன கடமைகளெல்லாம் நான் மறந்துவிட்டவைகளா, என் உள்ளத்தோடு ஒன்றி எப்போதும் என்னைத் தெளியவைத்துக் கொண்டிருக்கும் கடமைகளல்லவோ அவை?"

என் பேச்சை நிறுத்திவிட்டு, அண்ணு பேசினுன்.

"நேற்று என் நண்பனின் திருமணத்துக்காகச் சென்றேனல்லவா? அங்கே மணமகன் முரளியுடன் பேசிக்கிட்டிருந்தேன். அப்போ உன்னைப் பத்திப் பேச்சு வந்தது. அப்போதான் 'இது' பற்றித் தெரிஞ்சுது. அங்கே இருந்த வேருெருவர் சொன்னுர், ஜெனரல் செகரட்டரியா இருக்கிற சேகரைத்தானே சொல்றீங்க? நல்லாத் தெரியுமே!' அத்தோடு அவர் நிறுத்திவிடவில்லை. உன்னையும் மாலதியையும் வெளியில் சில இடங்களில் ஒன்ருகப் பார்த்திருப்பதாகவும் சொன்னுர். அத்தோடு, நீ மாலதிக்கு சத்தியம் செய்து கொடுத்திருக்கிருயாமே! ஆறுமாதங்களுக்குள் அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொள்வதாக... இதெல்லாம் உண்மை தானே?"

என் உடலுடன் உள்ளமும் நடுங்கியது.

பேச்சேவராமல் தடுமாறினேன்.

"அண்ணு! மாலதியின் மேல் நான் காதல் கொண்டுள்ளதாகச் சொல்வதோ, அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொள்வதாகச் சத்தியம் செய்ததாகச் சொல்வதோ பொய்; வதந்தியாகத்தான் இருக்கும் என்பேன். அவளும் நானும் கல்லூரி விழாக்கள் சம்பந்தமாக எப்போதாவது பேசியிருப்போம்... உங்களைப் போலவேதான் அவளுடைய வீட்டிலும் தவருகப் புரிந்துகொண்டு அவளை என்னுடன் பேசக் கூடாது என்று தடுத்திருக்கிருர்கள். நான் இப்போது அவள் வீட்டுப்பக்கம் கூடச் செல்வதில்லை அண்ணு... எப்படியானுலும் நான் என் கடமைகளை மறந்துவிடவில்லை அண்ணு. நளினியைக் கட்டிக் கொடுக்க வேண்டியது எனக்குத் தெரியும்; தம்பியைக் கல்லூரியில் சேர்க்கவேண்டும் என்பதும் தெரியும்..."

இதுவரை விஷயம் ஒன்றுமே அறியாதவள் போல் இருந்த அம்மா பேசலானுள்:

"ஏண்டா சேகர், இப்படியெல்லாம் நீ பண்ணலாமோ? அப்பா எவ்வளவு கடனை வாங்கி உன்னைப் படிக்கவைத்தார்? அவர் நெனச்சிருந்தா, குடும்பத்து நிலைமையில் உன்னை எஸ்.எஸ்.எல்.சி.யோடவே நிறுத்தியிருக்கலாம். உனக்கும் படிப்பிலே ஆர்வமிருக்கேன்னு பார்த்துதான் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தார்...... பொறுத்தது பொறுத்தோம். இன்னுமொரு அஞ்சு வருஷம் பொறுத்தால் கடன் சுமையில் தத்தளிக்கும் குடும்பத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவர் முடியும்னு சொல்லி உன்னை பி.எஸ்.ஸி.யில் சேர்த்தாரே, மறந்துட்டியா?

அம்மாவின் கேள்விக் கணைகள் என்னை நிலைகுலையச் செய்தன. தம்பி சுதாகரும் அங்கே வந்துவிட்டான்.

அம்மாவோ தொடர்ந்தாள்; "அதெல்லாம் போகட்டும். மாலதி இத்தனைக்கும் கருப்பாமே! அழகாயிருக்கமாட்டாளாமே! நம்ம குலமென்ன, அவளோட குலமென்ன? ...ஒண்ணுலியாவது பொருந்திவராதவளைப் போய்......"

அம்மா என்னென்னவோ பேசிக்கொண்டு போனுள். என் இதயத்தை ஏதோவொரு முரட்டுக் கரம் பிசைவதுபோல் இருந்தது.

"அம்மா..."

மேலே வார்த்தைகள் வராமல் தொண்டை அடைத்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, என் தம்பி சுதாகர் இவ்வளவு விஷயங்களையும் கேட்டுக் கொண்டிருந்தது என் மனத்தை என்னவோ செய்தது. அவனுல் இனிமேல் நான் மதிக்கப்படுவேனு?...

வாசலில் அரவம் கேட்கவே, நளினி வாசற்படி நோக்கி விரைந்தாள்.

"அதெல்லாம் போகட்டும், இப்போ நீ மெட்ராஸ் போறது உண்மையாவே நண்பர்களுடன் தானு? இல்லை, அவளோடு ஏதாவது பதிவுத் திருமணம் கிதிவுத் திருமணம்னு ..."

திகிலினுல் என் தொண்டை குழையப் பதில் சொன்னேன்; "அம்மா! நான் அப்படியெல்லாம் போகமாட்டேன்னு உங்களுக்குத் தெரியாதாம்மா? நீங்க நிச்சயமா என்னை நம்பலாம்......அப்படியே இந்த சேகரோட மனம் மாலதியிடம் வசப்பட்டுவிட்டதாக வைத்துக்கொண்டாலும், தன் முன்னுல் நிற்கும் முக்கியக் கடமைகளை மறந்து காதல் என்றும் கல்யாணம் என்றும் பைத்தியம் பிடித்து அலைபவனல்லம்மா சேகர்!"

எனக்காகப் பரிந்து பேச யாருமில்லை என்பதால்தானே என்னவோ, என்னையே மூன்ரும் மனிதனுக்கி நற்சாட்சிப் பத்திரம் ஒன்றை நானே வழங்கிக் கொண்டேன்.

அப்பாவின் இருமல் சப்தம் கேட்டது.

"சரி, சரி; இதைப்பற்றி 'அவரு'க்கு ஒன்றும் தெரியவேண்டாம். எல்லாத்தையும் பிறகு பேசிக்கலாம்" என்ற அம்மா அடுப்பங்கரையை நோக்கிப் போய் விட்டாள்.

கீழே விழுந்துவிட்ட புத்தகத்தை எடுத்துப் பிரித்தேன். அண்ணு கூரை முகட்டைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான்.

என் கண்கள் பெயருக்குப் புத்தகத்தில் பதிந்தனவே தவிர என் சிந்தனை மரத்துப் போயிருந்தது; படிக்கவில்லை. கடலலைகளின் நடுவே சிக்கிக் கொண்டதுபோல ஒரு திகில்......

* * *

அன்று மாலை வாசலில் அமர்ந்து தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

தெருவில் போவோர் வருவோர் எல்லோருமே மகிழ்ச்சியாக இருப்பதுபோலத் தோன்றியது; உலகத்திலேயே நான் ஒருவனே துயரப் படுகுழியில் விழுந்திருப்பது போன்ற உணர்வெழுந்தது.

இருட்டி வெகு நேரங்கழித்து தம்பி சுதாகர் வந்தான்.

"ஏண்டா இவ்வளவு நேரம்? மார்ச் தேர்வு நெருங்குதே, ஒழுங்காப் படிக்கக் கூடாது?" என்று கேட்க வாயெடுத்த நான் கேட்கவில்லை; அடக்கிக் கொண்டேன்.

தம்பியை அதட்டிக் கேட்கத் தகுதியில்லாதவனாகி விட்டாற் போல ஓர் எண்ணம்! மௌனமாய்த் தெருவை நோக்கினேன்.

"ஏண்டா, சாப்பிட வரப் போறியா இல்லையா?"

உள்ளேயிருந்து அம்மாவின் குரல் வந்தது.

"எனக்குப் பசிக்கல்லேம்மா..."

நான் பதில் சொல்லி முடிப்பதற்குள் வெளியில் எங்கோ சென்றுவிட்டுத் திரும்பிய அப்பா காரணம் கேட்டார்; "ஏன்? உடம்புக்கு என்ன? ஏன் சாப்பிட மாட்டேங்கிறே? காலையிலிருந்தே என்னவோ போல் இருக்கியே!"

அப்பாவின் எத்தனைக் கேள்விகளுக்கும் ஒரே வார்த்தையில் பதில் சொன்னேன்; "ஒண்ணுமில்லேப்பா..."

எனக்குப் பசிக்கவில்லை. என்றாலும், அப்பாவுக்கு வீண் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டுவிடக் கூடாதே என்பதற்காகப் பெயருக்குச் சாப்பிட்டுவிட்டு எழுந்தேன்.

மறுநாள் காலை,

அமைதியைத் தேடி ஆண்டவன் சந்நிதிக்குச் சென்றேன்.

உடல் கோவிலில் உலவியதே தவிர உள்ளமென்னவோ இறைவனை நினைத்து ஒன்ற மறுத்தது.

கோவிலை விட்டு வெளியே வரும்போது கோபுரத்தருகே 'அவள்' — மாலதிதான் — தன் தோழியுடன் எதிரே வந்துகொண்டிருந்தாள்.

ஒரு மின்வெட்டு!

என் இதயம் துடிதுடித்தது; படபடத்தது.

எங்கேயோ பார்த்தவாறு அவளைக் கடந்தபோது கடைக்கண் மட்டும் அவளையே நோக்கிக் கொண்டிருந்தது.

அவளும் தன் பேச்சு மும்முரத்தில் என்னைக் கவனிக்காததுபோல, ஆனால் திருவள்ளுவர் கூறியதைப் போல 'பொது நோக்கு' நோக்கிக் கொண்டே போனாள்.

"நீ சென்னை வந்தாக்கா கட்டாயம் என்னைப் பார்க்க வரணும்டீ! லாயிட்ஸ் காலனியில்தான் என் சித்தி வீடு. ராயப்பேட்டைக்கு வந்தியானா ரொம்ப கிட்டேதான். இல்லேன்னா 39-ஏயில் வந்து லாயிட்ஸ் ரோடு முனையில் இறங்கலாம்..."

மாலதி தன் தோழியிடம் முகவரி சொன்னது எனக்காகவே சொன்னது போலிருந்தது.

"நீ எப்போடீ ஊருக்குப் போறே?"

இன்னிக்கு ஜனதாவிலேதான்!"

"ஓ..."

இருவரின் குரல்களும் காற்றில் தேய்ந்து மறைந்தன.

'மாலதியும் சென்னைக்கு வருகிறாள்!' என்ற நினைவினால் என் மனம் கள்ளத்தனமாகக் குதிக்கத் துவங்கிக் குட்டிக்கரணமும் அடித்தது.

மாலதியும் அன்றைய ஜனதாவில் சென்னை புறப்படுவது வீட்டுக்குத் தெரிந்துவிட்டால்...? வேறு வினையே வேண்டாம்!

பிரயாணத்தைத் தள்ளிப் போட்டு அம்மாவுக்கும் அண்ணாவுக்கும் ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை வலுப்படுத்த நான்விரும்பவில்லை... அன்றே சென்னைக்குக் கிளம்பினேன்.

சென்னைக்குப் புறப்படுவதற்கு முன் அம்மா இரண்டொரு வார்த்தைகளில் என்னை எச்சரிப்பது போல அறிவுறுத்தினாள்: "...நம்ம குடும்ப நிலைமையை உணர்ந்து நடந்துக்கோப்பா."

* * *

சென்னையில் முதல் நான்கு நாட்கள் சென்றதே தெரியவில்லை. பிரபல லாட்ஜ் ஒன்றில் தங்கியிருந்தோம். வேளா வேளைக்குத் தின்ற பிறகு ஊரைச் சுற்றி சுற்றி வந்தோம்.

பார்த்தசாரதி கோவில் முதல் 'பை நைட்' படம் வரை ஒன்றை விட்டு வைக்கவில்லை நண்பர்களும் நானும். ஐந்தாம் நாள்.

ஒவ்வொருவனும் ஒவ்வொரு காரணம் செல்லி விட்டுப் பிரிந்தான்.

அறையில் நான் தனியனானேன். எப்போதும் போல் தனிமை என்னை மாலதியின் நினைவில் ஆழ்த்தியது.

என்னை அறியாமலே 39-ஏ பஸ்ஸில் ஏறினேன். கால்கள் லாயிட்ஸ் காலனியில் நடைபோட்டன.

என் அதிர்ஷ்டமோ என்னவோ, வீட்டு வாயிலிலேயே மாலதி நின்றிருந்தாள்; யாரோ ஒரு வயதான பெண்மணியுடன் பேசிக்கொண்டிருந்தாள். அந்தப் பெண்மணிதான் அவள் சித்தியாயிருக்க வேண்டும்.

என் கால்கள் சற்றே தயங்கி நின்றன.

ஒரு கணம். அவளும் என்னைப் பார்த்தாள்; நானும் அவளைப் பார்த்தேன்.

அதிகம் வளர்த்துவானேன்?

அன்று மாலை அண்ணா சதுக்கத்தருகே மாலதியைச் சந்தித்தேன், தற்செயலாக.

எல்லாம் சொல்லி வைத்தது போல் நடந்தது.

இணைப்பும் பிரிவும் இரட்டைப் பிறவிகளோ? நீண்ட பிரிவுக்குப் பிறகு என்னிடம் மனம் விட்டுப் பேசினாள் மாலதி.

மறுநாள் என்னைத் தன் சித்தி வீட்டுக்கு வரச் சொல்லிவிட்டு விடை பெற்றாள் மாலதி.

மறுநாள் மாலதியைக் காண அதி ஆவலுடன் காலையிலேயே சென்றுவிட்டேன். மாலதியின் சித்தி என்னிடம் ரொம்பவும் அன்பாக நடந்து கொண்டார்கள்.

அன்று முழுதுமே நான் அவர்களின் வீட்டு விருந்தினனாக வேண்டும் என்று ஓர் அன்புக் கட்டளையும் பிறந்தது.

என் மனம் பிரிவினாலும் பாசத்தாலும் காதல் நினைவுகளாலும் மேலே மேலே பறந்து கொண்டிருந்தது.

மாலதிக்கு 'செஸ்' விளையாட்டு தெரியாததால், மாலதியின் சித்தியும் நானும் 'செஸ்' விளையாடினோம். மாலதி அருகில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

என்னுடைய ராணியை மாலதியின் சித்தி வெட்டி விடும்போதெல்லாம் நான் மிகவும் சோர்ந்து விடுவேன். அந்த ஆட்டத்தில் தோற்று விட்டதாக ஒப்புக்கொண்டு அடுத்த ஆட்டம் ஆடலாம் என்பேன்.

"என்னுடைய ராணி போய் விட்டால் எனக்கு அப்படி ஒரு சோர்வு!"

★★★★★★★★★★★★★★

பணம் படைத்தவரெல்லாம் நல்ல குணம் படைத்தவராகி விட்டால் நாட்டிலே பஞ்சம்தான் ஏது. பட்டினிதான் ஏது. வாட்டம்தான் ஏது. வறுமை தான் ஏது.

—பேரறிஞர் அண்ணு

★★★★★★★★★★★★★★

இதைக் கேட்டுவிட்டு மாலதி யின் சித்தி மெல்லச் சிரித்துக் கொள்வாள்; மாலதி தலை கவிழ் வாள்.

காரணம், மாலதிக்கு 'ராணி' ஒரு செல்லப் பெயர் வீட்டில்.

என் இதய ராணியின் பெயரை அடிக்கடி உச்சரிப்பதில் அப்படி ஒரு ஆனந்தம்!

அன்று ஒருநாள் மட்டுமல்ல, ஒரு வாரம் இனிமையாக ஓடியதே தெரியவில்லை.

எங்களிருவரின் காதலுக்கு மாலதியின் சித்தியும் பூரணமான ஆதரவளித்தாள்.

மனதில்லாமல் விடைபெற்றுக் கொண்டு ஊர் திரும்பினேன்.

வீட்டிலோ—

என்னுடைய பெட்டியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்க ளெல்லாம் கலைக்கப்பட்டுக் கிடந் தன.

என்னுடைய டைரி!

ஆம்; அதுவும் பிரித்துப் படித் துப் பார்க்கப்பட்டிருக்கிறது!

குறிப்பெழுதுவது சரியா, தவரு என்பது எனக்குத் தெரியாது. ஆனல், என் மாலதியை நான் சந் திக்கும்போதும் பார்க்கும்போதும் என் மனத்தில் எழுகின்ற கருத்துக் குவியல்களைக் குறிப்பேட்டில் கொட்டுவது எனக்கு மனநிறை வைக் கொடுத்தது.

அதுவே, இன்று என்னைக் காட் டிக் கொடுத்து விட்டது.

சுதாகரைக் கூப்பிட்டுக் கேட்ட தில் குறிப்பேட்டைப் படித்துப் பார்த்துவிட்டார்கள் என்ற யூகம் உறுதியாயிற்று.

என் இதயத் தந்தி ஒன்று அறுந் தது. என் காதலைப் பற்றித் தெரிந்து கொண்டு விட்டார்கள்! அறிந்துகொள்ள வேண்டியது தான் என்ருலும் நேரங்கெட்ட நேரத்திலா என் காதல் வெளிப்பட வேண்டும்: சூருவளி கிளம்ப வேண்டும்!

திகைத்து நின்ற என்னை அம்மா வின் குரல் உசுப்பியது. "சாப்பிட வாயேண்டா."

அவமானத்தாலும் சோகத்தா லும் கவ்வப்பட்டதாலோ என் னவோ என்னு சாப்பிடுகிருேம் என்ற உணர்வேயில்லாமல் சாப் பிட்டேன்.

அம்மா என் இலையில் பாகற் காய் கறி பரிமாறுவதைப் பார்த்து அப்பா கடிந்து கொண்டார்: "அவ னுக்குத்தான் பிடிக்காதே, ஏன் வைக்கிறே?"

பெயருக்குச் சாப்பிட்டுவிட்டு எழுந்தேன்.

* * *

நாட்கள் ஓடிக்கொண்டேயிருந் தன.

கல்லூரியில் ஓரிரண்டு மாதங் கள் மாலதியைச் சந்திக்க முடிந் தது. ஜாடையாய் என் மனத்தைக் குத்தும் அம்மாவின் பேச்சுக்களை யும் மாலதியின் இதழ்க்கடைப் புன்னகைக் கீற்றும், கனிவான சொல்லும் மறக்கடித்தன.

எம். எஸ். சி முடித்ததும் அதற் கும் வழியில்லாமல் போயிற்று.

திருச்சியில் விரிவுரையாளர் வேலை கிடைத்தது. குடும்பமும் திருச்சிக்கு இடம் பெயர்ந்தது.

ஓராண்டு கழித்து தற்செயலாக சிதம்பரம் செல்ல நேர்ந்தது. வாய்ப்பை விட மனமில்லாமல் மாலதியின் வீடு நோக்கி நடந் தேன்.

அவளே எனக்கெதிரே வந்து கொண்டிருந்தாள்!

என் உள்ளம் விம்மியது! உதடு கள் பேசத் துடித்தன!

ஆனல்—

அவளருகே ஒரு வாலிபன்—ஒரு புதிய முகம்!

மாலதிக்குத் திருமணம் நடந்து விட்டதா, என்ன?

தலை குனிந்துகொண்டே மாலதி என்னைக் கடந்து சென்றுவிட் டாள். ஆம், என்னைக் கடந்து சென்றுவிட்டாள்.

காலவெள்ளம் என்னுடைய பழைய நினைவுகளை அடித்துச் செல்லப் பார்த்தது. ஆனுலும் மாலதியை என்னல் மறக்க முடிய வில்லை. குடும்பக் கடமை என்ற பெயரில் என்னையே நான் மறக்க முயற்சி செய்தேன்.

சுதாகரைக் கல்லூரியில் சேர்த் தாயிற்று; நளினியைக் கட்டிக் கொடுத்தாயிற்று; அப்பாவின் கட னில் பாதி அடைந்து போயிற்று.

மாலதியின் சித்தியை ஒரு தடவை புகைவண்டியில் சந்தித் தேன். எங்களின் காதலுக்கு அவ ளால் உதவி செய்ய முடியாமற் போய்விட்டதையும். மாலதியின் தந்தை சற்றும் செவிசாய்க்காமல் போய்விட்டதையும் சொல்லி வருத்தப்பட்டாள். அவ்வளவே! வருத்தம் என்ன செய்யும்?

இதோ, அம்மா சாப்பிட அழைக் கிருள்.

இலை முன்னே அமர்கிறேன்.

இன்றும் பாகற்காய் கரிதான். என் இலையில் பரிமாறப்படுவதைப் பார்த்துவிட்டு அப்பா எப்போதும் போல் அம்மாவை முறைக்கிருர்.

நானே அதை விட்டுவைக்க வில்லை. பாகற்காயை நான் சாப் பிடுவது கண்டு அப்பா வியக்கிருர்; அம்மா விழிக்கிருள்.

எனக்கென்னவோ பாகற்காய் கசக்கவில்லை.

ஆம்; கசப்பான அனுபவங்களை வாழ்வில் அடிக்கடி எதிர்கொண்டு பக்குவப்பட்டு போன பின்னர், என்னைப் போன்றவனுக்கு பாகற் காய்கூட கசப்பதில்லைதான்...! ஃ

★★★★★★★★★★★★★★

ஏகாதிபத்தியம்

எந்த சமயத்தில், எந்த கட்சி வலையில் வீழ்கிறதோ அதை வைத்துக்கொண்டு தன் வாழ்வை நடத்தத் தீர்மானித்திருக்கிறது ஏகாதிபத்தியம், கோழி சண்டை — மாட்டுச் சண்டை — குஸ்தி — இவைகள் நடத்திவைக்கும் காசு திரட்டிகள் இருக்கிருர்களல்லவா? அதுபோல் ஆகிவிட்டது ஏகாதிபத் தியம்.

—பேரறிஞர் அண்ணு

★★★★★★★★★★★★★★

★ அணைக்க வரவா? ★

கவிஞர் மணிவேந்தன்

★

1. கட்டுக் குலைந்திடாத பட்டுத் தளிருடலைத்
தொட்டுத் தழுவ வரவா ?—தேன்
சொட்டும் இதழ்விரிக்க சிட்டுக் குருவியே!நான்
கிட்டே நெருங்கி வரவா ?

2. கொல்லும் கருவிழியே! முல்லை இதழ்சுவைக்க
மெல்ல நடந்து வரவா ?—எனை
வெல்லும் பருவஎழில் சொல்லும் அமுதமொழி
செல்லக் கிளியே! வரவா ?

3. உள்ளங் கவர்ந்தவளே! கிள்ளைக் கனிஇதழை
மெள்ளச் சுவைக்க வரவா ?—உன்
துள்ளும் பருவமெனும் கள்ளைக் களிப்புடனே
அள்ளிப் பருக வரவா ?

4. கொஞ்சுங் கனிமொழியே! பஞ்சு மலருடலே!
கொஞ்சிக் களிக்க வரவா ?—உன்
பிஞ்சாம் உடல்தழுவி நெஞ்சம் மகிழ்ந்திடவே
வஞ்சிக் கொடியே! வரவா ?

5. அன்ன நடையுடனே என்னை மயக்கும்எழில்
பெண்ணே! அணைக்க வரவா ?—உன்
கன்ன நறுங்கனியைத் தின்ன விரும்புகிறேன்
பொன்னே! எழுந்து வரவா ?.

★

உயிர் பலி

(கவிஞர். கருமலைத் தமிழாழன்)

பொன்னே வாரி இறைத்தார் போன்று வானம் பொலிகின்றது. வெம்மை குறைந்து குளுமை பரவுகிறது. இரை தேடிச் சென்ற பறவையெல்லாம் தன் கூட்டை அடைகிறது. மேய்ச்சலுக்குச் சென்ற தாய்ப்பசு தன் கன்றை காண ஓடி வருகிறது.

முல்லை தன் தலைவனைக் காண சோலை அடைகிறாள். தோழியை விடுத்து தலைவனிடத்து செல்கிறாள். காளையவனும் கட்டியணைக்க கிள்ளை மொழியாள் கொஞ்சிப் பேசுகிறாள். இடையே அத்தான்! இன்னும் எத்தனை நாள்தான் நாம் இப்படியே வாழ்வது? பலநாள் கள்வன் ஒருநாள் அகப்படுவான் என்பதுபோல் ஊரார் நம்மைப்பற்றி அலர் எழுப்புவாரன்றோ? நானோ இல்லிருந்து வெளி வருவது சிறையிலிருந்து தப்பி வருவதுபோலுள்ளது. அவ்வாறு த்தாயின் விழிப்பிலிருந்து தப்பி வந்தாலும் சோலை வருவதற்குள் யார் கண்டிடுவாரோ என்ற அச்சம் மேலிடுகிறது. அதுவுமன்றித் தங்களைக்கண்டு விட்டு வீடடைந்தாலோ தங்கள் நினைவோ எனை வாட்டுகிறது.

இன்னிலையில் உணவோ இறங்குவதில்லை. இதை கண்ணுற்ற தாயோ மகள் உண்ணாததற்கு காரணம் யாரோ என சொல்லம்புகளால் துளைப்பது ஒரு பக்கம் இத்தனையும் பொருத்து நான் எத்தனைநாள் பொறுமையுடன் இருப்பேன். விரைவில் மணக்கிறேன் எனச் சொல்லி நாள் கடத்துகிறீரே! இன்னும் எத்தனை நாட்கள் இவ்வல்லலில் உழலவேண்டும் சொல்லுங்கள் அத்தான்.

கண்ணே! இத்தனை நாட்கள் பொறுத்த நீ இன்னும் இரு திங்களே காத்திடுவாய். அதற்குள் இன்ப வாழ்விற்கு தேவையான பொருள் தேடி வெளி நாட்டிற்கு சென்று வெற்றியோடு உனைக் காண்பேன் கவலையற்க. அன்பிணைந்து நாம் நடத்தும் வாழ்வை அனைவர் பாராட்டும் இன்பத்தில் திளைத்திடும் நாள் அருகிருக்க பிறரென்ன கூறுவார் என்ற அச்சத்தை ஏற்றாலென்! அறியாத நம்மிருவர் இடையே அழியாத உறவின்று உள்ளத்தால் ஒன்றிவிட்டன. நமதுள்ளமே நம்மிருவர் காதலுக்கு சாட்சியுமாகும். வரும் வரைக்கும் எனக்காக காத்திருப்பாய். வரும்போதே மாலையுடன் நான் வருகிறேன். எனத் தலைவன் முல்லையிடம் விரியா விடைப் பெற்றான்.

பிரிவென்னும் துயரேந்தி பிரியாத தோழியுடன் விரைந்தோடி வருகின்ற நிலவொளியில் உளம் பற்றி எரிந்திடவே வீடடைந்தாள். அன்னை உரிமையோடு வாயிற்படியில் நின்றே சினம் பொங்க முல்லையைக் கடிந்தாள்.

என்னடிப் பெண்ணே! இத்துணைநேரம்! கதிரோ மறைந்து நிலவும் வந்ததடி. சேலை வயதில் சோலையிலென்ன வேலையடி. ஊரார் காணின் என்ன உளறுவாரடி. பருவப் பெண்ணை மயக்கும் மாலை சாலை திரிய விட்டாயடி என என்னையன்றோ பழிதூற்றுவர். இனி வீட்டைவிட்டு வெளியே வராதே போயென்றார்.

பதிலோ கூற பயமும் பற்றிட பாவை வீட்டுள் சென்றாள். பாலும் கசக்க, பழமும் புளிக்க படுக்கை மீதினில் புரண்டாள். தாயும் உண்ண பலமுறையழைக்க முல்லை வேண்டாமெனும் மொழியே விடுத்தாள். நாட்கள் நகர்ந்தன. நாயகன் காணா கண்கள் தூக்கமின்றி சிவந்தன. பொலிவிழந்த முகத்தோடு நுதல் திலகம் மறந்தன. பின்னலின்றி குழல் பறக்கலாயின. எழில் தவழும் உடலெங்கும் பசலை படர்ந்தன. மனம் முழுவதும் தலைவனையே சுற்றி வந்தன. வெளிநாடு சென்றுள்ள தலைவன் எவ்வாறுள்ளானோ என்ற ஏக்க மிகுதியால் உணவு உண்ணவில்லை, தூய்மையான உடைகள் உடுக்கவில்லை. ஒலிக்கின்ற தொடியினின்று ஒலியிழந்தன. மொத்தத்தில் உயிரிருந்தும் உயிரில்லா உடலானாள்.

பெற்ற தாய்க்கோ பெருங்கவலை பற்றின. அன்பு மகள் அலைகுலைந்து போவதைக்கண்டு உளம் வாடின. காரணம் அறிய மனம் துடித்தன. அறியமுடியாமல் ஏங்கின. பக்கத்து வீட்டு பவழத்திடம் முல்லைநிலை எடுத்துரைத்தாள். பவழமோ! என்ன, உணவு உண்பதில்லையா! நாளுக்கு நாள் உடல் மெலிகிறதா! உறக்கம் கொள்வதில்லையா ? அலங்காரம் செய்து கொள்வதில்லையா? எல்லாம் அந்த பேயின் வேலைதான் இது! வயதுப் பெண்ணை வட்டமிடும் அதுதான் உன் பெண்ணையும் பிடித்துள்ளது. இதற்கு வேறெதுவும் செய்யவேண்டாம் கோடி வீட்டு பூசாரியை அழைத்து வந்து பூசை போட்டால் போதுமென்றாள். இக்கூற்றை உண்மையென அவள் தாயும் பூசாரியை அழைக்கச் சென்றாள்.

அவன் கேட்ட பொருளனைத்துமே வாங்கி தந்தாள். பூசாரி முல்லையை அமர வைத்து எதிரே சிறு ஆட்டுக் குட்டி யொன்றை வெட்டி வைத்து, வாங்கி தந்த பொருளையெல்லாம் பரப்பி வைத்து; உடுக்கையொன்றை கையினிலே ஆட்டிக்கொண்டு ஏதேதோ வாயினில் முணுமுணுத்து நெற்றியிலே விபூதியை இழுத்துவிட்டு பாவனை செய்கிறான்.

அவ்வேளை முல்லைத் தோழி அங்கே வர பூசாரி நடத்தும் இந்த நாடகத்தைக் கண்டு வெகுண்டாள். பொய்யனை நோக்கி, ஐயனே யான் கேட்கும் வினாவிற்கு விடை பகன்ற பின் தொடர்வாய். என்று. நீ படைக்கும் இச் சோற்றாலும், ஆட்டுக் கறியாலும் இறையை வணங்கி நெற்றியில் இடும் வெண் பொடியாலும் குறிஞ்சித் தலைவன்மேல் இவள் கொண்டுள்ள காதல் வெறியை, மாற்ற இயலுமென்றால் இச் செயலை நீ செய்வாயாக என்றாள்.

தோழியின் சொற்கேட்டு ஆய்ந்தவனாய் பூசாரி

தெளிவு பெற்ருன். இனி இவர்களிடத்து ஏமாற்ற இயலாதென முடிவு கொண்டான். காலம் மாறி விட்டன. மக்கள் தெளிவு பெற்றனர். அறிவின் திறன் அறிந்தனர். ஆகவே இனி இவரிடத்து ஏமாற்ற இயலாதென முடிவு கொண்டான். இவ் வெறியை போக்க இயலாதென ஓடினுன்.

தாயும் வெட்கினுள், சொல்லிய பவழமும் வெட்கினுள்! மகள் மனதில் நிறைந்துள்ள மன்னவனுக்கே மணம் முடிக்க சம்மதம் தந்தாள். பொருளோடு தலைவன் வந்தான். பெரும் புகழோடு கடிமணம் கொண்டான்.

அதே சோலையில் அதே வேளையில் அருகருகே ஆயிரம் கதைகள் பேசுகின்றனர். அதட்டுவோர் யாருமில்லை, அந்தியைத் தவிர.

இக் காட்சியைக் கவிதையால் காணவேண்டுமோ? காணுங்கள்.

முருகு அயர்ந்து வந்தமுதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி; வினவுவது உடையேன்,
பல்வேறு உருவேன் சில்அவிழ் மடையொடு
சிறுமறி கொன்று, இவள்நறு நுதல்நீவி,
வணங்கினை கொடுத்தி ஆயின் அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலப்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே?

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள்ளொடு சிவனும் அவ்வயிற் பெயரே
கொள்வழியுடைய பலவறி சொற்கே.

என்று அஃறிணைப் பன்மையை மட்டும் உணர்த்தும் என்று கூறி இரார் அன்ருே? இலக்கியப் புலவர் இலக்கணக் கூற்றைக் கடந்து மொழிவழக்கைத் தழுவும் உரிமையுடையார். ஆனுல் இலக்கணப் புலவர் இலக்கிய உண்மையை விடுத்து இலக்கணம் கூறும் இயல்பினர் அல்லர். ஆதலின் தொல்காப்பியர் திருவள்ளுவர்க்கும் முற்பட்டவர் என்று அறுதியிட்டு உறுதியோடு கூறலாம்.

தொல்காப்பியர் உவம உருபுகளைத் தொகுத்துக் கூறியுள்ள பட்டியலில் 'அற்று', அனைய என்பவைகளும் அவற்றின் அடியாகப் பிறந்தவைகளும் சேர்க்கப்பட்டில. திருவள்ளுவர் அற்று என்பதைப் பதினேரு இடங்களிலும் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் திருவள்ளுவருக்குப் பின் வாழ்ந்தவராயிருப்பின் திருக்குறளில்பயின்றுள்ள உவம உருபுகளைக் கூருது விட்டுவிடுவாரா? ஆகவே தொல்காப்பியர், திருவள்ளுவர்க்கும் காலத்தால் முற்பட்டவர் என்பது உறுதியான உண்மைஎன்று உணரலாம்.

வட மொழியாளர் தென்னுட்டில் குடிபுகத் தொடங்கிய காலமென்று கொள்ளலாம் என டாக்டர் இலக்குவனுர் தாம் எழுதிய 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்னும் நூலில் குறிப்பிடுகிருர்கள்.

ஆரியர்கள் வட இந்தியாவில் நிலைத்து நாளடைவில் இந்தியா முழுவதும் பரவித் தெற்கே வாழ்ந்த திராவிடர்களுடன் தொடர்பு கொண்டு தம் கலையையும் நாகரிகத்தையும் அவர்களிடையே பரப்பி வெற்றி கொண்ட காலம் கி. மு. 1030—320 என்று ஆர். சி. தத்தர் தாம் எழுதிய 'Early Hindu Civilization' என்ற நூலில் குறிப்பிடுகிருர். ஆதலின் தொல்காப்பியர் காலத்தை நாம் கி. மு. ஏழாம் நூற்ருண்டு என்று கொள்வது முற்றிலும் பொருந்தும். தொல்காப்பியத்தை அடுத்துச் செய்யப்பட்டதாகத் திருக்குறளைக் கூறலாம் என்று சோமசுந்தர பாரதியார் தாம் எழுதிய 'திருவள்ளுவர்' ஆங்கில நூலில் குறிப்பிடுகிருர்,

நூலின் அமைப்பும் அழகும்

தொல்காப்பியரால் எழுதப்பட்ட நூல் தொல்காப்பியம் ஒன்றுதான். நூல் என்பதற்கு இவர் கூறிய இலக்கணம் அனைத்தும், இவர் நூலில் அமைந்திருப்பதைக் காணலாம். கற்போர் எளிதில் நினைவு கொள்ளுமாறு இன்னேசையும் எதுகையும் மோனையும் அமைந்து இன்பம் பயந்து நிற்பது இந்நூலாகும். சென்று தேய்ந்து இறுதலின்றியும் மிகுதல், குறைதல் இன்றியும், அழகாகவும் செவ்விதாகவும் இந்நூல் இயன்றுள்ளது.

இந்நூல் எழுத்து சொல் பொருள் என்னும் மூன்று அதிகாரங்களை யுடையது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்களாக மொத்தம் இருபத்தியேழு இயல்களை உடையது. இம்மூன்று அதிகாரங்களிலும் உள்ள நூற்பாக்கள் எல்லாம் உரையாசிரியர்கள் கருத்திற்கேற்ப இணைத்தும் பிரித்தும் கூறப்பட்டுள்ளவாதலின் அவற்றின் எண்ணிக்கையும் ஒவ்வொருவருடைய கருத்திற்கேற்ப மாறுபடுகின்றன.

எழுத்ததிகாரம் 483 என இளம்பூரணரும் நச்சினுர்க்கினியரும் கொள்வர். சொல்லதிகார நூற்பாக்கள் 456 என இளம்பூரணரும் 463 எனச் சேனுவரையரும் நச்சினுர்க்கினியரும் 453 என்று தெய்வச் சிலையாரும் கொள்வர். பொருளதிகார நூற்பாக்கள் 656 எனக் கொள்வர். இளம்பூரணர் பொருளதிகார முழுமைக்கும் பிற உரையாசிரியர்களின் உரை கிடைத்திலது.

தொல்காப்பியம் மிகவும் இனிய நூல் அதன் நடை மிகவும் நேரிய முறையில் அமைந்துள்ளது. ஒரே சூத்திரம் பல இடங்களில் கூறினும் அவ்வவ் இடத்திற்கேற்ப அந்நூற்பாவின் பொருள் அமையச் செய்தலும் ஒரே தொடர் பல நூற்பாக்களில் வருமாறி செய்தலும் அன்றி அத்தொடர் தனித்த நூற்பாகவே வருமாறு செய்தலும் மாட்டேறு பெற நூற்பாக்கள் செய்தலும் இலக்கணம் கூறும் வகையில் ஆங்காங்குச் சொற்பொருள் விரித்தலும் வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செய்த இவர், வழக்கு, செய்யுள் ஆகிய இவ்விரண்டிற்கும் பொதுப்பட விதி கூறுதலன்றிச் செய்யுட்கே உரிய விதிகளைத் தனித் தனித்து கூறுலும் இவர்தம் பழக்கமாகும். இந்நூற்கு உரையாசிரியர்கள் அறுவர். அவர்கள் 1. இளம்பூரணர், 2. சேனுவரையர், 3. நச்சினுர்க்கினியர், 4. தெய்வச் சிலையார், 5. பேராசிரியர், 6. கல்லாடர் பாழைய உரைகாரரர் ஆவர்.

உயர்கலைக்கெல்லாம் பிறப்பிடமாகக் கிரேக்க நாட்டையே கூறுவர். ஆனுல் தொல்காப்பியத்தை ஆய்ந்து கற்போர் அவ்வாறு கூருர், பல உயர்கலைக்கெல்லாம் பிறப்பிடம் தமிழகமே என்று தலைநிமிர்ந்து சாற்றுவர். இவ்வளவு தொன்மையும், வளமும், பெருமையும், அழகும் பெற்ற ஒல்காப் புகழ் பெற்ற தொல்காப்பியத்தைப் படித்து அதன்படி நடத்தல் தமிழ் படித்தார் கடனுகும்.

வாழ்க தமிழ்!

எண்ணும் எழுத்தும் நல்லறிவின் அடிப்படை
சேமிப்பும் சிக்கனமும் நல்வாழ்வின் அடிப்படை

★

நம்மைவிட்டுச் செல்லும் ஒவ்வொரு மணித்துளியும்
திரும்பி வரப்போவதில்லை!

காலம் பொன் போன்றது! வாழ்வும் அதுபோன்றதே!

★

எனவே, முடிந்தளவு சேமித்துக்கொள்ளுங்கள்!

சேமிப்பு — நம் எதிர்காலத்துக்கு மட்டுமல்ல
நாளைய தலைமுறைக்கும் நல்வாழ்வு நல்கும்!

சிறுசேமிப்பால் நமக்கும் பயனுண்டு நாட்டுக்கும் பயனுண்டு

இன்றே அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் :

சிறுசேமிப்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பூரண உரிமையாளர்; ஜி. செல்வராஜ், பி. ஏ.,

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.